தமிழ்நாடு சட்டமன்றப் பேரவை நூலகம்
5 - அக் 2012
சென்னை-600 009

5. அறிவிப்புகள்—தொடர்ச்சி

(ஊ) உறுப்பினர்களுக்கு மாண்புமிகு முதலமைச்சர் அளிக்கும் விருந்திற்குச் செல்ல பேருந்து வசதி

மாண்புமிகு பேரவைத் தலைவர்: பேரவைக்கு ஓர் அறிவிப்பு. தமிழ்நாடு சட்டமன்றப் பேரவை உறுப்பினர்களைப் பெருமைப்படுத்தும் வகையில், மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் இன்று (20-7-2009) இரவு 7-30 மணிக்கு, சென்னை, தாஜ் கோரமண்டல் ஓட்டலில் விருந்து அளிக்கவுள்ளார்கள். இதுகுறித்த அழைப்பிதழ்கள் ஏற்கெனவே மாண்புமிகு உறுப்பினர்களுக்கு அனுப்பப்பட்டுள்ளன. உறுப்பினர்கள் அனைவரும் அவ்விருந்தில் கலந்துகொள்ள வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

உறுப்பினர்கள் விருந்தில் கலந்துகொள்வதற்கு வசதியாகச் சட்டமன்றக் குடியிருப்பு வளாகத்திலிருந்து இன்று மாலை 6-30 மணி, 6-40 மணி, 6-50 மணி மற்றும் 7-00 மணியளவில் நான்கு பேருந்துகள் புறப்படும் என்பதையும் உறுப்பினர்களுக்குத் தெரிவித்துக்கொள்கிறேன்.

8. அரசினர் தீர்மானம்

விதி 32-ஐத் தளர்த்துதல்

மாண்புமிகு பேரவைத் தலைவர்: 21-07-2009 அன்று வினாக்கள்-விடைகள் நேரத்தை ஒத்திவைப்பது குறித்த தீர்மானம். மாண்புமிகு பேரவை முன்னவர் அவர்கள்.

***மாண்புமிகு பேராசிரியர் க. அன்பழகன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

"சட்டமன்றப் பேரவையின் முதல் ஒரு மணி நேரம் 'வினாக்கள்-விடைகள்' என்று உள்ள சட்டமன்றப் பேரவை விதி 32-ஐ, 21-7-2009, செவ்வாய்க்கிழமை அன்று தளர்த்தி, அந்நேரத்தை அரசினர் அலுவல்களுக்கு எடுத்துக்கொள்ள வேண்டும்"

என்னும் தீர்மானத்தை முன்மொழிகிறேன்.

பிற்பகல் 1-50

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு பேரவை முன்னவர் அவர்களின் தீர்மானம் பேரவையின் முடிவிற்கு விடப்படுகிறது.